[1987 மார்ச் 3]

ஆண்டிமடம், செந்துரை ஊராட்சி ஒன்றியங்களில் புதிய பாலர் பள்ளிகள் துவங்குதல்.

33—(*வினா எண். 9819) திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் மற்றும் செந்துரை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மேலும் புதியதாக பாலர் பள்ளி துவங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) சம்மந்தப்பட்ட கிராமங்களில் சத்துணவுக் கூடங்கள் இல்லாமல் தேவையான அளவிற்குக் குழந்தைகள் இருக்கிறார்களோ, அங்கு அந்தக் குழந்தைகளுடைய எண்ணிக்கையை ஆய்வு செய்து அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தக்க பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை கிடைத்த பின் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் கூறுகின்றபோது குழந்தைகள் எண்ணிக்கையைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை வருமேயானால், அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வகையில் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில், சாலக்கரை, மணக்கொல்லை போன்ற கிராமங்களிலேயும், செந்துரை ஊராட்சி ஒன்றியத்தில் நைனார்குடிகாடு போன்ற கிராமங்களிலேயும், 150-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தந்த கிராமங்களிலேயே பாலர் பள்ளிகளை புதியதாக துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 குழந்தைகளுக்கு மேல் இருக்குமானால், அந்தக் கிராமத்திலேயே சத்துணவுக் கூடங்கள் துவங்கப்படுகின்றன. 70 குழந்தைகளுக்குக் குறைவான எண்ணிக்கை இருக்குமானால், துணை மையங்கள் துவங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய கிராமங்களில் சத்துணவு மையங்களைத் தோற்றுவிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆய்வு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.